**செப்டம்பர் – 21**

# TNPSC துளிகள்

- சென்னை காந்தி மண்டபம் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணி வேலு நாச்சியாரின் சிலையை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் உலகின் மிக நவீன விளையாட்டு வளாகங்களில் ஒன்றான அகமதாபாத்தின் நாரன்புராவில் உள்ள வீர் சவர்க்கர் விளையாட்டு வளாகத்தை மத்திய உள்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பெண்கள் அமைப்பின் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநராக டாக்டர் சிமா சாமி பஹூஸ் இரண்டாவது முறையாகப் பணியாற்ற உள்ளார்.
- உஸ்பெக்கிஸ்தானின் சமர்க்கண்டில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு FIDE கிராண்ட் சுவிஸ் போட்டியில் அனிஷ் கிரி வெற்றி பெற்று, 2026 ஆம் ஆண்டு கேண்டிடேட்ஸ் போட்டியில் தனக்கான இடத்தைப் பிடித்தார்.
- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம் (DRI) ஆனது, "WeedOut" என்ற பெயரிலான ஒரு அடக்குமுறை நடவடிக்கையில், இந்தியா முழுவதும் மேற்கொள்ளப்படும் மண்ணிலா முறையில் விளைவிக்கப்பட்ட கஞ்சா இலைகளைக் கடத்தும் சிண்டிகேட் (வணிகக் குழு) கடத்தல் குழுவினை அகற்றியது.
- பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பை சுழியமாக குறைத்த நாட்டின் முதல் ஒன்றியப் பிரதேசமாக புதுச்சேரி உருவெடுத்துள்ளது.
- மணிப்பூர் மாநிலத்தின் உக்ருல் மாவட்டத்தில் உள்ள சிராராகோங் கிராமத்தில் 14வது சிராராகோங் ஹாதே மிளகாய் திருவிழா தொடங்கப்பட்டது.
    - தனித்துவமான நறுமணம் மற்றும் அதன் சுவைக்காக பிரபலமாக அறியப்பட்ட, புவி சார் குறியீடு வழங்கப்பட்ட சிராராகோங் ஹாதே மிளகாயை மேல்தரப் படுத்துவதை இந்தத் திருவிழா நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பனைமரப் பாதுகாப்பு இயக்கம்

- தமிழ்நாடு அரசானது, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் வெட்டப்படும் ஒவ்வொரு பனைமரத்திற்கும் ஈடாக 10 மரக்கன்றுகளை நடவு செய்யும்.
- பனை மரங்களை வெட்டுவதற்கான அனுமதியை 'உழவன்' (விவசாயி) கைபேசி செயலி மூலம் பெற வேண்டும்.
- பனை மரம் ஆனது, 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தமிழ்நாட்டின் மாநில மரமாக அறிவிக்கப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டில், பனை மரங்களை வெட்டுவதற்கு அனுமதி பெறுவது கட்டாயம் என்று வேளாண் அமைச்சர் அறிவித்தார்.
- தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கூற்றுப்படி, 2019–2020 ஆம் ஆண்டு நிலவரப்படி தமிழ்நாட்டில் சுமார் ஐந்து கோடி பனை மரங்கள் இருந்தன.
- இந்தியாவில் சுமார் 10 கோடி பனை மரங்கள் இருப்பதாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.
- இந்தியாவில் உள்ள மொத்தப் பனை மரங்களில், ஐந்து கோடி பனை மரங்கள்

தமிழ்நாட்டில் உள்ளன.

- கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழக அரசு அதன் மாநில மரத்தைப் பாதுகாக்கும் பணியை செயல்படுத்தி வருகிறது.




## சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களின் சந்ததியினருக்கான ஓய்வூதியம்




- தமிழக அரசானது, புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் சந்ததியினருக்கான சிறப்பு ஓய்வூதியத்தினை 500 ரூபாய் அதிகரித்து 10,500 ரூபாயிலிருந்து 11,000 ரூபாயாக உயர்த்தியுள்ளது.
- திருத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையானது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.
- இந்த முயற்சியின் பயனாளிகளில் மருது பாண்டியர் சகோதரர்கள், வீரபாண்டிய கட்டபொம்மன், மன்னார் முத்துராமலிங்க விஜய இரகுநாத சேதுபதி மற்றும் வ.உ. சிதம்பரனார் ஆகியோரின் வழித்தோன்றல்கள் அடங்குவர்.
- சுதந்திரப் போராட்ட வீரர்களின் சந்ததியினர் தங்கள் வாழ்நாள் முழுவதும் இந்த ஓய்வூதியத்தைப் பெறுவார்கள்.
- தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான அரசு ஓய்வூதியம் 1,000 ரூபாய் அதிகரிக்கப் பட்டுள்ளது.
- திருத்தப்பட்ட அரசு ஓய்வூதியம் ஆனது மாதத்திற்கு 21,000 ரூபாயிலிருந்து 22,000

ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- சுதந்திரப் போராட்ட வீரர்களைச் சார்ந்திருந்தோருக்கான குடும்ப ஒய்வூதியம் 500 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- புதிய குடும்ப ஒய்வூதியத் தொகையானது 11,500 ரூபாயிலிருந்து அதிகரிக்கப்பட்டு, மாதத்திற்கு 12,000 ரூபாய் ஆக உள்ளது.

## கோயில் வழிபாட்டில் சமத்துவம்




- வழிபாட்டில் சமத்துவம் என்பது வாதத்திற்கு உட்பட்டது அல்ல (மாற்றத்தகாதது) என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.
- கரூர் மாவட்டம் சின்னதாராபுரத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் சாதி அடிப்படையிலான கோயில் நுழைவு மறுப்பு தொடர்பான இரண்டு மனுக்களை நீதிமன்றம் விசாரித்தது.
- ஒரு மனு சாதி பாகுபாட்டை மறுத்தும்; மற்றொன்று பட்டியலிடப்பட்ட சாதியினர் வகுப்பினைச் சேர்ந்த பக்தர்களுக்கு கோயில் நுழைவு மறுக்கப்பட்டதாகக் கூறியும் முன் வைக்கப்பட்டன.
- வைக்கம் சத்தியாகிரகம் (1924–25), குருவாயூர் சத்தியாகிரகம் (1931–32), மற்றும் 1936 ஆம் ஆண்டு கோயில் நுழைவுப் பிரகடனம் போன்ற முக்கிய இயக்கங்களை நீதிபதி B. புகழேந்தி நினைவு கூர்ந்தார்.
- 1939 ஆம் ஆண்டு மதராஸ் கோயில் நுழைவு அங்கீகாரம் மற்றும் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் பட்டியலிடப்பட்ட சாதியினர் வகுப்பினைச் சேர்ந்த பக்தர்கள் 1939 ஆம் ஆண்டில் நுழைய அனுமதிக்கப்பட்டதை நீதிமன்றம் குறிப்பிட்டது.
- இந்த கோயில் நுழைவானது A. வைத்தியநாத ஐயர் மற்றும் L.N. கோபாலசாமி மற்றும் P. கக்கன் மற்றும் பலர் முன்னிலையில் நடைபெற்றது.
- மகாத்மா காந்தி இதை ஓர் ஆன்மீக வெற்றி என்று கூறி, 1946 ஆம் ஆண்டில்

பட்டியலிடப் பட்ட சாதியினர் வகுப்பினைச் சேர்ந்த பக்தர்களுடன் கோயிலுக்கு விஜயம் செய்தார்.

- 1939 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த நிகழ்விலிருந்து பெறப்பட்ட செய்தி, வழிபாட்டில் சாதி முறைகளுக்கு இடமில்லை என்பதுதான் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.
- கடந்த காலச் சீர்திருத்தங்கள் இருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டில், கரூரில் உள்ள மாரியம்மன் கோயிலில் பட்டியலிடப்பட்டச் சாதியினர் வகுப்பினைச் சேர்ந்த பக்தர்களுக்கு நுழைவு மறுக்கப்பட்டது.
- அந்தக் கோயிலை நிர்வகிக்கும் அறக்கட்டளையானது, அங்கு எந்தப் பாகுபாடும் மேற் கொள்ளப் படவில்லை என்று கூறி, 2018 ஆம் ஆண்டு தடை உத்தரவை நீக்க முயன்றது.
- நீதிமன்ற உத்தரவுகளைத் தொடர்ந்து, பட்டியலிடப்பட்டச் சாதியினர் வகுப்பினைச் சேர்ந்த பக்தர்கள் கோவிலின் உள்ளே நுழைந்து பிரார்த்தனை செய்ய அனுமதிக்கப் பட்டனர்.
- அத்தகைய நுழைவு ஆனது நீதித்துறை உத்தரவு மூலம் மட்டுமே நடந்தது நாணத்தக்க நிகழ்வு என்று நீதிமன்றம் கூறியது.
- 2018 ஆம் ஆண்டு முதல் நிர்வாக நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாமல் இருந்தது, நீண்டகால உரிமைகள் மறுப்புக்கு வழிவகுத்தது என்று நீதிபதி கூறினார்.
- கோயில் நுழைவின் போது ஏற்பட்ட தடைகள் கலவரத்திற்கும் குற்றவியல் வழக்குக்கும் வழி வகுத்தன.

## NLCIL நிறுவனத்திற்கான IPMA டெல்டா சான்றிதழ்




- NLC இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனம், சர்வதேசத் திட்ட மேலாண்மைச் சங்கத்திடமிருந்து மூன்றாம் நிலை IPMA டெல்டா சான்றிதழைப் பெற்றுள்ளது.
- NLCIL என்பது மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு நவரத்தினப் பொதுத் துறை நிறுவனமாகும்.
- இது திட்டம், செயல்முறைத் திட்டம் மற்றும் துறை மேலாண்மையில் NLCIL நிறுவனத்தின் நிர்வாக அமைப்புகளை அங்கீகரிக்கிறது.

- IPMA டெல்டா சான்றிதழ் ஆனது தனிநபர்கள் (திறன்), திட்டங்கள் (பயன்பாடு) மற்றும் அமைப்பு (ஆட்சி) ஆகிய மூன்று பரிமாணங்களை மதிப்பிடுகிறது.

## மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள்





- சேலம் மாவட்டம் கருப்பூரில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு (SHG) உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை தமிழ்நாட்டின் துணை முதல்வர் வழங்கினார்.
- இந்தியாவில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கும் முதல் மாநில அரசு தமிழ்நாடு அரசாகும்.
- தமிழ்நாடு முழுவதும் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.
- ஐந்து மாதங்களுக்கு முன்பு திருவாரூரில் நடைபெற்ற ஓர் அரசு விழாவில் சுய உதவிக் குழு உறுப்பினர்களால் அடையாள அட்டைகளுக்கான தேவை எழுப்பப்பட்டது.
- இந்த அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி, சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் தயாரிப்புகளை அரசு பேருந்துகளில் 100 கிலோமீட்டர் வரை இலவசமாக கொண்டு செல்லலாம்.
- ஆவின், கோ-ஆப்டெக்ஸ் மற்றும் முதல்வர் மருந்தகம் விற்பனை நிலையங்களில் அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு தள்ளுபடிகள் வழங்கப்படும்.

# தேசியச் செய்திகள்


## Frontier 50 முன்னெடுப்பு

- நிதி ஆயோக் அதன் வளர்ந்து வரும் புதியத் தொழில்நுட்ப மையத்தின் கீழ் Frontier 50 முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியது.

- இது வளர்ந்து வரும் புதியத் தொழில்நுட்பக் களஞ்சியத்திலிருந்து புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துமாறு 50 உயர் இலட்சியமிக்க மாவட்டங்கள் / தொகுதிகளை ஆதரிக்கிறது.
- இந்த முன்னெடுப்பு ஆனது உயர் இலட்சியமிக்க மாவட்டத் திட்டம் (ADP) மற்றும் உயர் இலட்சியமிக்கத் தொகுதிகள் திட்டம் (ABP) கருத்துருக்கள் முழுவதும் சேவைகளின் செறிவூட்டலை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வளர்ந்து வரும் புதியத் தொழில்நுட்ப மையம் ஆனது இந்தியாவை உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் மீளுந்திறன் கொண்டதாக தயார்படுத்த மாபெரும் தொழில்நுட்ப மாற்றங்களை எதிர்பார்க்கிறது.
- செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கணினி மற்றும் உயிரி தொழில்நுட்பம் போன்ற தொழில்நுட்பங்களை மதிப்பிடுவதற்கு அரசு, தொழில் துறை மற்றும் கல்வித்துறை நிபுணர்களை இது உள்ளடக்கியது.




## அரசு உறு சொத்துக் கோட்பாடு




- அரசு உறு சொத்துக் கோட்பாடு (Escheat) என்பது ஒருவர் உயில் இல்லாமல் மற்றும் சட்டப்பூர்வ வாரிசுகள் எதுவும் இல்லாமல் இறக்கும் போது அந்த சொத்தின் உரிமை அரசிடம் ஒப்படைக்கப்படும் ஒரு சட்டப்பூர்வ வழிமுறையாகும்.

- இது எந்தவொரு சொத்தும் உரிமை இல்லாமல் இருப்பதை உறுதி செய்து, சட்ட ஒழுங்கைப் பராமரிக்கிறது மற்றும் அந்தச் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துவதையோ அல்லது கைவிடுவதையோ தடுக்கிறது.
- "Escheat" என்ற சொல் ஆனது "to fall to" என்று பொருள்படும் "eschete" என்ற பழைய பிரெஞ்சு சொல்லிலிருந்து பெறப் பட்டது என்பதோடு நிலப்பிரபுத்துவ நில உடைமை அமைப்பில் அதன் தோற்றுருவினைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில், அரசு உறு சொத்துக் கோட்பாடு இந்திய அரசியலமைப்பின் 296வது சரத்து மற்றும் 1956 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 29வது பிரிவின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.
- சரத்து 296, வாரிசு அல்லது உரிமையாளரல்லாத சொத்து, அதற்கேற்றப் பொருந்தக் கூடிய விதிப் படி, மத்திய அல்லது மாநில அரசாங்கத்திடம் இருக்கும் என்று கூறுகிறது.
- இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 29வது பிரிவு, ஓர் இந்து நபர் உயிலில்லாமலும், சட்டப் பூர்வ வாரிசுகள் இல்லாமலும் இறந்தால், அந்த சொத்து அரசாங்கத்திற்குச் சொந்தம் ஆகிறது.
- ஒரு செல்லுபடியாகும் உயில் அமல்படுத்தப்பட்டு, தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் சான்று உறுதி வழங்கப்பட்டிருந்தால், அரசு உறு சொத்துரிமைக் கோட்பாட்டை செயல் படுத்த முடியாது என்று உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தெளிவுபடுத்தியது.
- அனைத்து சட்டப்பூர்வ வாரிசுகளும் இல்லாத போது மற்றும் எந்தவொரு சாசனமும் இல்லாதபோது, 29வது பிரிவின் கீழ் கடைசி முயற்சியாக மட்டுமே அரசு அதன் மீது உரிமை கோருகிறது என்று நீதிமன்றம் வலியுறுத்தியது.
- சொத்து சட்டப்பூர்வ உரிமையாளரிடம் விடப்படாமலோ அல்லது சட்டவிரோதமாக உடைமையாக்கப் படாமலோ இருப்பதை உறுதி செய்வதன் மூலம் பொது நலனைப் பாதுகாக்க இந்தக் கோட்பாடு உதவுகிறது.
- உரிய சட்டச் செயல்முறைக்குப் பிறகு உரிமை கோரப்படாத அல்லது கைவிடப்பட்ட சொத்துக்களுக்கும், குறிப்பாக வங்கி மற்றும் நிதித் துறைகளில் தனித்தனி ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ், சொத்துரிமைக் கொள்கை பொருந்தும்.
- இந்தியாவில், உரிமை கோரப்படாத நிதிச் சொத்துக்கள் இந்தியக் காப்பீட்டு ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி போன்ற நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
- ஒவ்வொரு சொத்துக்கும் ஒரு சட்டப்பூர்வ உரிமையாளர் இருப்பது மற்றும் புறக்கணிக்கப் படவோ அல்லது சுரண்டப்படவோ விடப்படாது என்பதை உறுதி செய்வதன் மூலம் சட்டத்தின் ஆட்சியை அரசு உறு சொத்துக் கோட்பாட்டுக் கொள்கை உறுதி செய்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## GLP-1 மருந்துகள்

- உலக சுகாதார அமைப்பு, GLP-1 உணரி இயக்கிகளை இரண்டாம் வகை நீரிழிவு நோய்க்கான அத்தியாவசிய மருந்துகளின் 24வது மாதிரிப் பட்டியலில் (EML) சேர்த்து உள்ளது.
- இதில் செமகுளுடைடு, டுலாகுளுடைடு, லிராகுளுடைடு மற்றும் டைர்செபடைடு ஆகியவை அடங்கும்.
- இந்த மருந்துகள் இரண்டாம் வகை நீரிழிவு நோய் மற்றும் அதனுடன் தொடர்புடைய இருதய நோய், நாள்பட்ட சிறுநீரக நோய் அல்லது உடல் பருமன் உள்ள வயது வந்த

நபர்களுக்காகக் குறிக்கப்படுகின்றன.

- உலகளவில், 800 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயுடன் வாழ்கின்றனர், கிட்டத்தட்ட பாதி எண்ணிக்கையிலான நபர்கள் சிகிச்சை பெறாமல் உள்ளனர்.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் விகிதங்கள் அதிகரித்து வருவதுடன், உலகளவில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் உடல் பருமனால் பாதிக்கப்படுகின்றனர்.
- GLP-1 உணரி ஏற்பிகள் இரத்தத்தில் குளுக்கோஸ் அளவினைக் குறைக்கவும் எடை குறைப்பை ஆதரிக்கவும் உதவுகின்றன.
- EML பட்டியலில் பட்டியலிடுவது இந்த மருந்துகளின் மலிவு விலை மற்றும் அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய சுகாதாரச் சவால்களை எதிர்கொள்ளவும் மருந்து அணுகலை மேம்படுத்தவும் WHO ஆனது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் அத்தியாவசிய மருந்துகளின் மாதிரிப் பட்டியலைப் புதுப்பிக்கிறது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### ஓசோன் படல மீட்பு

- 2024 ஆம் ஆண்டில் ஓசோன் துளை சமீபத்திய ஆண்டுகளை விட சிறியதாக இருந்ததாக உலக வானிலை அமைப்பு (WMO) தெரிவித்துள்ளது.
- மான்ட்ரியல் நெறிமுறையின் கீழ் உலகளாவிய முயற்சிகள் ஆனது 99 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஓசோன் குறைப்பு பொருட்களை படிப்படியாக நீக்கியுள்ளன.
- ஓசோன் படலமானது 2066 ஆம் ஆண்டில் அண்டார்டிகாவிலும், 2045 ஆம் ஆண்டில் ஆர்க்டிக்கிலும், 2040 ஆம் ஆண்டில் உலகளவில் 1980 ஆம் ஆண்டில் இருந்த நிலைகளுக்குத் திரும்பும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு அண்டார்டிக் ஓசோன் துளையானது தாமதமான தொடக்கத்தையும் விரைவான சீராக்கத்தினையும் காட்டியது என்பதோடு இது ஆரம்பகால மீட்பு அறிகுறிகளைக் குறிக்கிறது.
- இந்த வெற்றிகரமான உலகளாவியச் சுற்றுச்சூழல் முயற்சிக்கு மான்ட்ரியல்

நெறிமுறை மற்றும் வியன்னா உடன்படிக்கை ஆகியவை மதிப்பு சேர்க்கின்றன.

- ஓசோன் நிலையின் தொடர் கண்காணிப்பு மற்றும் மாற்றுப் பயன்பாட்டு இரசாயனங்கள் அதன் நிலையான மீட்சியை உறுதி செய்வதற்கு அவசியமாக உள்ளது.
- மான்ட்ரியல் நெறிமுறைக்கான கிகாலி திருத்தம், 2100 ஆம் ஆண்டிற்குள் புவி வெப்பம் அடைதலை 0.5°C ஆகக் கட்டுப்படுத்த ஹைட்ரோஃப்ளூரோகார்பன்களைக் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.
- ஓசோன் படல மீட்பு தோல் புற்றுநோய், கண்புரை மற்றும் புற ஊதா கதிர்வீச்சினால் ஏற்படும் சுற்றுச்சூழல் சேதத்தின் அபாயங்களைக் குறைக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## பெண்களின் பொருளாதார அதிகாரமளிப்புக் குறியீடு


- பெண்களின் பொருளாதார அதிகாரமளிப்புக் (WEE) குறியீடு உத்தரப் பிரதேச அரசாங்கத்தினால் தொடங்கப்பட்டது.
- இது வேலைவாய்ப்பு, கல்வி, தொழில்முனைவு, வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய ஐந்து பொருளாதாரத் துறைகளில் பெண்களின் பங்களிப்பைக் கண்காணிக்கிறது.
- திறன் சார் திட்டங்களின் சேர்க்கையில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்கள், மேலும் அவர்கள் கடன் பெறுவதற்கான குறைந்த அணுகலுடன் பதிவு செய்யப்பட்ட தொழில்முனைவோரின் ஒரு பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.
- இந்தக் குறியீடு உத்தரப் பிரதேசத்தின் போக்குவரத்துத் துறையில் பாலின ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் காட்டுகிறது, இது பெண்களுக்கானப் பணி சேர்ப்பு உத்திகளை மறுவடிவமைப்பு செய்தல் மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்ற கொள்கைச் சீர்திருத்தங்களுக்கு வழி வகுக்கிறது.

- இந்தியாவின் பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் 41.7% ஆக உள்ளது, ஆனால் வேலை செய்யும் பெண்களில் 18% மட்டுமே முறையான (அதிகாரப்பூர்வ) வேலை வாய்ப்புகளில் உள்ளனர்.
- இந்தியாவின் பாலின இடைவெளியைக் குறைக்கவும், பயனுள்ள கொள்கை மற்றும் நிதி ஒதுக்கீட்டுச் சீர்திருத்தங்களை வழி நடத்தவும் அனைத்து துறைகளிலும் பாலின ரீதியாகப் பிரிக்கப்பட்ட தரவு அவசியமாகும்.
- ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் தெலுங்கானா போன்ற டிரில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதார இலக்குகளைக் கொண்ட மாநிலங்கள், உள்ளடக்கிய வளர்ச்சிக்காக WEE குறியீட்டுக் கட்டமைப்பைப் பயன்படுத்தலாம்.




# முக்கிய தினங்கள்

## உலக நிணநீர்த் திசுப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் 2025 - செப்டம்பர் 15




- நிணநீர் மண்டலத்தின் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், நிணநீர் மண்டலங்களின் செயல்பாடு குறித்து மக்களுக்குக் கல்வி கற்பிப்பதையும்

இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- நிணநீர் மண்டலங்கள் நிணநீர் முடிச்சுகள், மண்ணீரல், தைமஸ் சுரப்பி மற்றும் எலும்பு மஜ்ஜை ஆகியவற்றைக் கொண்டுள்ளன.
- நிணநீர்த் திசுப் புற்றுநோயில் ஹாட்ஜ்கின்ஸ் நிணநீர்த் திசுப் புற்றுநோய் மற்றும் ஹாட்ஜ்கின்ஸ் அல்லாத நிணநீர்த் திசுப் புற்றுநோய் என இரண்டு முக்கிய வகைகள் உள்ளன.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின கருத்துரு, "Honest Talk" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★